செ.வெ.எண். 32 நாள்: 14.11.2021

**நாகோஜனஹள்ளி கயம் ஏரி, கம்புகாலம்பட்டி பெரிய ஏரி மற்றும் வாடாமங்கலம் ஏரியில் வடக்கிழக்கு பருவமழையொட்டி முழு கொள்ளவு எட்டியுள்ளதையடுத்து உபரி நீர் வெளியேற்றம் மற்றும் நீர்வெளியேற்றும் கால்வாய்களை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் இன்று (14.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம் நாகோஜனஹள்ளி கயம் ஏரி, கம்புகாலம்பட்டி பெரிய ஏரி மற்றும் வாடாமங்கலம் ஏரிகளில் வடக்கிழக்கு பருவமழையொட்டி முழு கொள்ளவு எட்டியுள்ளதையடுத்து உபரி நீர் வெளியேற்றும் மற்றும் நீர்வரத்து கால்வாய்களை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.மதியழகன் ஆகியோர் இன்று (14.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

நாகோஜனஹள்ளி பேரூராட்சிக்குட்பட்ட 16.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட கயம் ஏரி மற்றும் 19 ஏக்கர் பரப்பளவு கொண்ட கம்புகாலப்பட்டி பெரிய ஏரியில் வடகிழக்கு பருவமழை யொட்டி முழுகொள்ளவு எட்டிள்ளதையடுத்து ஏரியில் சிறு உடைப்பு ஏற்பட்டு உபரி நீர் குடியிருப்பு பகுதிகள் மற்றும் நெல் வயல்களில் வெள்ள நீர் வெளியேறியதையடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏரியின் கரைகள் மற்றும் கால்வாய்களை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் சீரமைத்து உபரிநீர் வெளியேற்றும் பணிகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து குடியிருப்பு பகுதிகளில் இருந்து நீர் வெளியேற்றும் பணிகளையும், வயல்களில் நீர் வெளியேற்றும் பணிகளையும் நேரில் பார்வையிட்டு உபரி நீர்களை வெளியேற்ற அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உபரி நீர் வெளியேற்றும் கால்வாய்கள் சீரமைக்கும் பொருட்டு கருத்துரு தயார் செய்ய அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். கயம் ஏரியில் சிறிய அளவில் உடைப்பு ஏற்பட்ட இடத்தில் மணல் மூட்டைகள் கொண்டு தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து வாடமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட ஏரி முழு கொள்ளவு எட்டியுள்ள நிலையில் உபரி நீர் ஜடையன் கொட்டாய் மற்றும் கரியன் கொட்டாய் பகுதிகளில் குடியிருப்பு பகுதிகள் மற்றும் வயல்களில் நீர் புகுந்துள்ள நிலையில் நீர் வெளியேற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து வாடாமங்கலம் கிராமத்தில் பொதுமக்களுக்கு உணவு பொட்டலங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இவ்வாய்வின் போது கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திரு.சத்தீஸ்குமார், போச்சம்பள்ளி வட்டாட்சியர் திரு.இளங்கோ, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.எம்.அசோகன், திரு.அன்சர்பாஷா,வருவாய் ஆய்வாளர் திருமதி.லதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.